# அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் குழுவில் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல்

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு உட்படும் உத்தியோகத்தர்களால் இழைக்கப்படுகின்ற தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாவது அட்டவணையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நேரடியாகவே மேற்கொள்ளப்படுவதோடு, அதற்காக செயற்படுத்தப்பட்டு வரும் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்கள் குழுவில் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களாகப் பதிவு செய்துகொள்வதற்கு விருப்பமுள்ள பின்வரும் தகைமைகளையுடைய **ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நீதவான்கள், மாவட்ட நீதிபதிகள் போன்ற ஓய்வுபெற்ற நீதித்துறை உத்தியோகத்தர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம். அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 18/2018 பிரகாரம் விசாரணை நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவு செய்யப்படும். ஏற்புடைய விண்ணப்பப்படிவங்களை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்வதன் மூலமோ அல்லது முகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட 9”x 4” அளவிலான கடித உறையொன்றைப் பின்வரும் முகவரிக்கு அனுப்புவதன் மூலமோ பெற்றுக்கொள்ள முடியும்.

**தகைமைகள்:-**

1) ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் 2023.05.02 ஆம் திகதியன்று 75 வயதுக்குக் குறைந்தவராக இருத்தல்.
2) அரசாங்க சேவையில் / நீதித்துறை சேவையில் பதவிநிலை உத்தியோகத்தராகப் பத்து வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.
3) தனது சேவைக்காலத்தினுள் தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றமொன்றுக்கு ஒழுக்காற்றுத் தண்டனைப் பெற்றிராதவராக இருத்தல்.

மேற்படி தகைமைகளையுடைய, ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்கள் குழுவில் பதிவு செய்து கொள்ள விருப்பமுடைய உத்தியோகத்தர்கள் இந்த அலுவலகத்திலிருந்து அல்லது உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொண்ட விண்ணப்பப்படிவங்களை உரிய முறையில் பூரணப்படுத்தி, ஓய்வுபெறுகை அனுமதிக்கப்பட்ட கடிதத்தின் பிரதியொன்றுடனும் ஓய்வூதியக் கொடைப்பத்திரத்தின் பிரதியொன்றுடனும் பின்வரும் முகவரி அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு 2023.05.02 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் குழுவில் பதிவு செய்தல்”** எனக் குறிப்பிடவும்.

முகவரி : செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு,
இல. 1200/9,
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.

**இணையத்தளம்** : www.psc.gov.lk
**மின்னஞ்சல்** : info@psc.gov.lk

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

தனுஜா முருகேசன்
பதில் செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு

<u>அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் குழுவில் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம்</u>

<u>(ஓய்வுபெற்ற அரசாங்க மற்றும் நீதித்துறை உத்தியோகத்தர்கள்)</u>

1. முதலெழுத்துக்களுடன் பெயர்:-...............................................................
2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :-.............................................
   .............................................
3. பிறந்த திகதி :-...............................................................
4. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு வயது. :-..................
5. தேசிய ஆள் அடையாள அட்டை இல:- ..................................................
6. தனிப்பட்ட முகவரி :- .............................................................
7. மாவட்டம் :...............................................................
8. தொலைபேசி இலக்கம் :- கையடக்க:................................................
   நிரந்தர:....................................................
9. முதல் நியமனத் திகதி :- .............................................................
10. ஓய்வுபெற்ற திகதி :- .............................................................
   (ஓய்வுபெறுவிக்கப்பட்ட கடிதத்தின் பிரதியையும் ஓய்வூதிய சான்றிதழின் பிரதியையும் இணைக்கவும்)
   10.1 ஓய்வுபெறும்போது வகித்த பதவி :- ..................................................
   10.2 சேவை மற்றும் தரம் :- ..................................................
   10.3 சேவை நிலையம் :- ..................................................
   10.4 இறுதியாக பெற்ற சம்பளம் :- ...................................................

11. முன்னாள் வகித்த பதவிகள்
   (இறுதியாக வகித்த பதவியை ஆரம்பத்தில் குறிப்பிடவும். இடவசதி போதாது எனின் மேலதிக தாளொன்றை இணைக்கவும்)

| | பதவி | சேவை நிலையம் | காலம் |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |

12. ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்ள முடியுமான மொழி
(உரிய கூட்டினுள் "√" புள்ளடி இடவும்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிங்களம் | | தமிழ் | | ஆங்கிலம் | |

13. ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ள முடியுமான மாவட்டங்கள்
:……………………………………………………………………………………
……………………………………………………………………………………
……………………………………………………………………………………

14. தங்களது சேவைக்காலத்தினுள் தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதயின் கீழ் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? : ……………………………………………………
……………………………………………………………………………………
……………………………………………………………………………………

15. ஒழுக்காற்று விசாரணையை நடாத்துவதிலுள்ள அனுபவம் (இடம் போதாது எனின் மேலதிக தாளொன்றை இணைக்கவும்) : ……………………………………………
……………………………………………………………………………………
……………………………………………………………………………………
……………………………………………………………………………………

16. சட்டத்தரணியாக பெற்றுள்ள தகைமைகள் / அனுபவம் பெற்றிருப்பின் அது பற்றிய தகவல்களைத் தருக :…………………………………………………………
……………………………………………………………………………………
……………………………………………………………………………………
……………………………………………………………………………………

என்னால் வழங்கப்பட்டுள்ள மேற்படி தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானதும் சரியானதுமென உறுதிப்படுத்துகின்றேன்.

……………….                                        ………………………….
திகதி                                        விண்ணப்பதாரியின் கையொப்பம்